**செய்தி வெளியீடு எண்:042** **நாள் : 19.01.2016**

**<u>ஓய்வூதியர்கள் கவனத்திற்கு</u>**

**ஓய்வூதியம் – மாதாந்திர ஓய்வூதியத்திலிருந்து வருமான வரி பிடித்தம் செய்தல் ( TDS ) – குறித்து.**

ஓய்வூதியர்கள் மார்ச் மாதம் முதல் பிப்ரவரி மாதம் முடிய ஓராண்டில் பெறும் மொத்த ஓய்வூதியம் மற்றும் அகவிலைப்படி நிலுவை முதலானவைகள் மீது கணக்கிடப்படும் வருமான வரியினை, ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் / கருவூல அலுவலரால் அவர்தம் மாதந்திர ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்யப்படுகிறது. ஓய்வூதியர்கள் வருமான வரி சட்டம் **1961–**ன் அத்தியாயம் VI-A ன் கீழ் தகுதியுள்ள கழித்தல்களுக்கான (eligible deductions) விவரங்களை ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் / கருவூல அலுவலருக்கு தெரிவிக்கும்பட்சத்தில், அவர்தம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

வருமான வரி சட்டம் **1961** அத்தியாயம் VI-A ன்படி கழித்தலுக்கு தகுதியான முதலீடுகளுக்குரிய சான்று நகல்களை ஓய்வூதியர்கள் (வருமான வரி கணக்கீடுதாரர்கள்) ஜனவரி மாதத்தில் ஓய்வூதியம் வழங்கும்அலுவலர் / கருவூல அலுவலரிடம் அளித்தால், அவற்றை சரிபார்த்து உரிய வரியை மட்டும் பிடித்தம் செய்ய ஏதுவாக இருக்கும். உரிய ஆவணங்களை முன் கூட்டியே (ஜனவரி 25 தேதிக்குள்) அளிக்கத் தவறினால், ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் / கருவூல அலுவலர் தங்களிடமுள்ள ஆவணங்களின் அடிப்படையில் வரி பிடித்தம் செய்ய நேரிடும்.

வருமான வரி பிடித்தத்திற்கு உட்படும் ஓய்வூதியர்கள் தங்களது **நிரந்தர கணக்கு எண்ணை (PAN)** ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் / கருவூல அலுவலருக்கு கட்டாயமாக தெரிவிக்க வேண்டும். ஓய்வூதியர்கள் தங்களது PAN எண்ணை ஓய்வூதியம் வழங்கும் அலுவலருக்கு அளிக்கவில்லையெனில், பெறப்படும் ஓய்வூதியத்தின் மீது வருமான வரி பிடித்தம் செய்யப்படும்போது மிகையாக வரி பிடித்தம் செய்ய நேரிடலாம். மிகையாக பிடித்தம் செய்யப்படும் வருமானவரி ஓய்வூதியம் வழங்கும் அலுவலரால் திருப்பிவழங்கப்படமாட்டாது. வருமானவரி அறிக்கை தாக்கல் செய்யப்படும்போது மட்டுமே, வருமான வரித்துறையிடமிருந்து அதனை மீளப்பெற இயலும்

இது தொடர்பாக, ஓய்வூதியர்கள் தாங்கள் பெறும் மொத்த ஓய்வூதிய விபரம், பிடித்தங்கள், வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் நிகர ஓய்வூதியம் போன்ற விவரங்களை **www.tn.gov.in/karuvoolam/** இணைய தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும், தேவையான

விவரங்களை ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் / கருவூல அலுவலரிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

ஓய்வூதியர்கள் தாங்கள் பெறும் மொத்த ஓய்வூதியம், முதலீடுகள் மற்றும் பிடித்தம் செய்யப்பட வேண்டிய விவரங்களை வருட ஆரம்பத்திலேயே தெரிவிப்பதற்கு ஏதுவாக கருவூலக் கணக்குத் துறை வடிவமைத்துள்ள படிவத்தை **www.tn.gov.in/karuvoolam/** இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் / கருவூலத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் வருமானவரி செலுத்தும் ஓய்வூதியர்கள் **www.incometaxindiaefiling.gov.in** இணைய தளத்தில் தங்களது வரி வரவு அட்டவணையை (படிவம் 26 AS) சரி பார்த்து உறுதி செய்து கொள்ளலாம் .

**<u>படிவம் 16</u>**

TRACES இணைய தளத்திலிருந்து பெறப்படும் **"படிவம் 16"** ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் / கருவூல அலுவலரால் / சார் கருவூல உதவிக் கருவூல அலுவலரால் கையொப்பமிடப்பட்டு மே மாதம் 31–ம் தேதிக்குள் வழங்கப்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**